புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# வேந்துவிடு தொழில்
## *(ஐங்குறுநூறு, அகநானூறு முல்லைப் பாடல்களில்)*

*முனைவர் மு.ஜெகதீசன்*
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம் – 627425*
*திருநெல்வேலி மாவட்டம்*

==========================================================================

*ஆய்வுச்சுருக்கம்*

*ஐங்குறுநூற்றில் (401-500) நூறு பாடல்களும், அகநானூற்றில் 4, 14, 24, என்று நான்கு வரிசையில் வரும் இருபது பாடல்களும் முல்லைத்திணை மாந்தர்களின் கற்புத்திறனை முல்லை உரிப்பொருளான இருத்தல் அதன் நிமித்தத்தில் பாடப்பட்டுள்ளன. இருத்தல் உணர்வுகளில் கூடியிருத்தல், ஆற்றியிருத்தல், ஆற்றாதிருத்தல் முதன்மைபெறுகிறது. மழைக்காலத்தில் புதுப்புனல் வரவில் தன் தலைவனுடன் தலைவி நீராடுதல், தாவரங்கள் பூத்துக்குலுங்குதல், விலங்குகள், பறவைகள் தன் பெடையுடன் கூடியிருத்தல், அதனைத் தலைவி தலைவனுடன் கண்டு மகிழ்வெய்துதலும் கூடியிருத்தலும் இயல்பான உள்ளுணர்வு. அப்பருவத்தில் பொருள்வயிற் பிரிந்த, போருக்குச் சென்ற தலைவன் திரும்பவில்லையெனில் ஆற்றாமை மிகுந்த தலைவி வருத்தமுறுவது ஆற்றாதிருத்தலின் பாற்படும். கார்காலத்தில் ஏற்படும் பிரிவு தலைவிக்கு மட்டுமல்ல தலைவனுக்கும் ஆற்றாமையை மிகுவிக்கும். போருக்காகச் சென்ற தலைவனின் ஆற்றாமைக்கு வேந்தன் விடுத்த தொழில் முதன்மைக் காரணமாக அமைகிறது. பாசறையில் தங்கியிருக்கும் தலைவன் வேந்தனின் அதிகாரம், எதிர் வேந்தனை வென்று திரை பெறுதல், செல்வங்களைக் கைப்பற்றுதலில் ஆர்வம் மிகுதல், அதனால் வேனிற் காலத்தில் தொடங்கிய போரை மழைக்காலம் வந்தும் முடிவுக்குக் கொணராமல் தொடருதல், தலைவனை வேந்தன் பாசறைப் பணியில் ஈடுபடுத்துதல் போன்ற காரணிகள் அக மாந்தர்களிடம் ஆற்றாமை உணர்வைத் தோற்றுவிக்கின்றன. முல்லைப் பாடல்களில் இத்தகைய உணர்வுகள் உரிப்பொருளாக அமைவதை இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது.*

*முதன்மைச் சொற்கள்: வேந்தர்களும் போர்த்தொழிலாளர்களும், வேந்தர்களின் சினம், திரை பெறுதல், தலைவனின் இல்லறப் பற்று, தலைவியின் கற்புநெறி.*

*முன்னுரை*

*சங்க ஐந்திணைப் பாடல்களில் மனித வாழ்வியலை அகம், புறம் என்று பாகுபடுத்துகின்றன. புற வாழ்வில் வேந்தன் முதன்மையாளன் ஆகிறான். போர், போரின் முன்பின் நிகழ்வுகள், வேளாண்மை முதலிய தொழில்களுக்குப் படை வீரர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். அரசன் விடுக்கும் தொழில்பட்ட ஆண்கள் அகப்பாடல்களில் தலைவனாக பாடப்பெறுகின்றனர். காதல், உடன்போக்கு, கரணம் உள்ளிட்ட சூழல்களில் வேந்தன் விடுத்த தொழில் பாடுபொருளாகிறது. வேந்தனின் விடுத்த தொழிற்பட்ட ஆண், தன் தலைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கையில் இடர்பாடுகளில் மிகுகிறான். இவ் இடர்பாடுகள் ஆற்றாமை உணர்வுகளாக வெளிப்படுகிறது. ஆண் தொழிலாளர்களின் அக வாழ்வு வேந்தனின் அதிகாரம், அவன் விடுத்தத் தொழிலைச் செய்யவேண்டும் என்ற கடமையுணர்வு போன்றவற்றில் சிக்குண்டு தவிக்கும் எண்ணங்களை அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய தொகைகளிலுள்ள முல்லைப் பாடல்களில் காணக்கிடைக்கின்றன. அப் பாடல்கள்*

*புலப்படுத்தும் மாந்தர்களின் உள்ளுணர்வுகளுள் அரசன் விடுத்த தொழில் சிக்கல்களாக அமைவதை இக்கட்டுரை விளக்கமுயல்கிறது.*

*வேந்தர்கள் – போர்த் தொழிலாளர்கள்*

*குறிப்பிட்ட நிலத்தையும், அந்நிலத்தில் வாழும் மக்களையும், தன் அதிகாரத்தின்வழி ஆள்பவனை வேந்தன், வேந்து, அரசன், மன்னன் ஆகிய சொற்களில் அழைத்துள்ளனர். ''மன்னர் இயவரின் இரல்படும் கானம்'' (ஐங்.425), ''பீடுஇலா அரசன் நாட்டு ஏதிலான் படைபோல,''[1] ''நல்அறநெறி நிறீஇஉலகு ஆண்ட அரசன்''[2] எனவரும் ஐங்குறுநூறு, கலித்தொகைப் பாடலடிகள் அரசன், மன்னன் என்பதன் அதிகாரமும், வேந்தன் என்பதன் அதிகாரமும் சமம் என்பதை உணர்த்துகின்றன. இதனை, ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பேரெல்லை''[3] என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மூவர் என்பது சேர, சோழ, பாண்டிய வேந்தர்களைக் கருதலாம். பெரும் நிலப்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்து ஆளுபவர்களை வேந்தர் எனக் குறிப்பிடுள்ளனர். ''மலை மண்டிலம், சோழ மண்டிலம், பாண்டிய மண்டிலம், தொண்டை மண்டிலம் என்று நான்கு பெயருடைய தமிழ்நாடு என்றதோடு சேர, சோழ, பாண்டியர் என்னும் தமிழ் நிலப்பகுதி''[4] என்று நச்சினார்க்கினியர் கூறும் விளக்கத்திலும் அறியலாகிறது. இவற்றில் சோழ மண்டலத்தில் இருவழிக்குடிகள் இருந்துள்ளனர். இவர்கள், உறந்தையையும், அழுந்தூரையும் ஆண்டு வந்தனர். உறந்தை வேந்தன் 'கிள்ளி' என்ற குடிப்பெயரையும், அழுந்தூர் வேந்தன் 'சென்னி' என்ற குடிப்பெயரையும் பூண்டிருந்தனர்.[5] சோழர் மண்டலத்தை ஆண்டபோதும், வெவ்வேறு குடியைச் சார்ந்தவர்களானதால் அவர்களுள் பகைமை இருந்துள்ளது. சேர மண்டிலத்திலும் இருவழிகுடிகள் இருந்துள்ளன. உதியஞ்சேரல் இரும்பொறை, அத்துவஞ்சேரல் இரும்பொறை என்றிரு வம்சத்தவர் இருந்துள்ளனர். ''உதியஞ்சேரல் இரும்பொறை வழி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானை செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டு சேரலாதன் ஆகிய ஐவரும், அத்துவஞ்சேரல் இரும்பொறை வழி செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எரிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய மூவர் இருந்துள்ளனர்''[6] என்று பதிற்றுப்பத்து உரையில் ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை விளக்குகிறார். பாண்டிய மன்னர்களிடையே இம்மாதிரியான இருவழிக் குடிகள் இருந்ததாக அறிதற்கியலவில்லை. இம்மூவேந்தர்கள் தவிர குறுநிலப் பரப்பினைத் தலைமையாகக் கொண்டு ஆங்காங்கே சிறுபகுதிகளை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் முதுகுடி (தொல்குடி) மன்னர்கள், குறுநில மன்னர்கள், சீறூர் மன்னர்கள், கிழார் மரபினர் என்று ஐவகை நிலப்பகுதிகளில் சிறுபரப்பினை ஆட்சி செய்துள்ளனர். இம் மன்னர்கள் பெரும் வேந்தர்களின் ஆதரவிலும், தன் சுய அதிகாரத்திலும் ஆண்டுள்ளனர். சில சிறுமன்னர்கள் பெரும் வேந்தர்களைப் போர்க்கலங்களில் ஆதரித்துள்ளனர். படை உதவிகள் செய்துள்ளனர். திறை செலுத்தியுள்ளனர். வேந்தர்கள் போரில் தோல்வியுற்ற மன்னர்களிடம் திறை பெற்றுள்ளனர்.*

*சேர, சோழ, பாண்டிய வேந்தர்களுக்குப் படைத்தொழில் உதவும் சிற்றரசனாகவோ, படைவீரனாகவோ தலைவன் காணப்படுகிறான். வேந்தனுக்கு அடுத்த நிலையில் சிற்றரசனும் படைவீரனும் இருந்துள்ளனர். வேந்தனுக்குப் படை, கொடி, கொடை, முரசு, புரவி, களிறு, தேர், வெண்கொற்றக் கொடை முதலியவும் இன்னபிறவும் உடைமைப் பொருள்களாகின்றன.[7] வேந்தன் போரில் சிறந்த வீரர்களுக்கும், ஆட்சித்திறத்திற்கு உறுதுணையாக விளங்கிய சான்றோர்களுக்கும் தன் உடைமைகளான நிலங்கள், யானைகள், பொன், பொருள்களைக் கொடையாகக் கொடுத்துள்ளான். அந்தணர், வேளாளர், வணிகர் முதலான குழுக்களுக்குப் படையும் அளித்துள்ளான். ''வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்''[8] என்ற தொல்காப்பியக் குறிப்பு சான்றாகிறது. அரசன், சீறூர் மன்னன், சிறுகுடி மன்னன் ஆகியோர்க்குப் போர் செய்வதற்கு படைகளை வழங்கி உதவுவதைப் போல, உழவுத்தொழில் புரியும் வேளாளர்களுக்கு 'தலைமாலை'களைப் போல தம் வீரர்களை உழவுத்தொழில் செய்வதற்கும் வழங்கியுள்ளான். 'படை' என்பதில் பயிற்சி பெற்ற குதிரை, யானை போன்ற விலங்குகள் இடம்பெறுகின்றன. அவற்றை இயக்குவதில் தேர்ச்சி பெற்ற மனிதர்களும் அடங்குவர். போர் இல்லாத காலங்களில் படை வீரர்கள் வேந்தர்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில், வேளாளர்களுக்கு உதவியாக வேளாண்மை செய்துள்ளனர்.*

தொல்காப்பியப் புறத்திணையியலில் வேந்தர்கள்

தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்நிலங்களில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை ஆகிய போர்முறைகளையும், வேந்தர்கள் போரிடும் நோக்கம், முறை, சூழல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. வேந்தனின் தொழிலானது வீரர்களை வேற்றுப்பகுதிக்கு அழைத்துச் சென்று மாற்று இனக்குழு பகுதியில் வாழும் மக்களின் உடைமைகளான ஆநிரைகளைக் கவர்வதும், நிலங்களைக் கைப்பற்றுவதும், அரசனின் அரண்மனை மதில்களைக் கைப்பற்றுவதும் ஆகும். இம்மாதிரி உடைமைகளைக் கைப்பற்றுதல் இயலாத கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் தன் வலிமையை நிலைநாட்டுவதற்குப் போரிடுகிறான். இப்போர்முறை வலிமை பெற்ற வேந்தன் வீரம் நிறைந்தவனாகவும், சமூக மதிப்புறு கொண்டவனாகவும், தன்னிகரில்லாத் தலைவனாகவும் மாறுவதைக் காட்டுகிறது. ஆநிரைகளைக் கைப்பற்றுதல், பங்கிடுதலான இனக்குழு மரபில் தொடங்கி தன் வலிமையை நிலைநாட்டும் பெரும் வேந்தன் மரபாக மாறியதைத் தொல்காப்பியம் குறிப்பிடுவதன்வழி அறியமுடிகிறது.

இவ் வேந்தர்கள் பெரும் நிலப்பரப்புகளைப் பெற்றவர்களாக இல்லாமல் குறுநிலப் பரப்புகளை இனக்குழு ஆதிக்கமுடைய வேந்தர்களாகவே இருந்துள்ளனர். சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்கள் காலத்தில்தான் வேந்தன் என்ற சொல்லாட்சி பெரும் நிலப்பரப்புடையவர்களாக, இனக்குழு, குறுநில, முதுகுடி மன்னர்களைவிட ஆதிக்கம் பெற்றவர்களாக இருந்துள்ளனர். அதிக நிலப்பரப்பும், படைபலமும், வேளாண்மைப் பகுதிகளையும் கைப்பற்றிய மன்னர்கள் தம்மை வேந்தர்களாக அடையாளப்படுத்தியுள்ளனர். முதுகுடி, தொல்குடி, சீறூர் மரபினர் என்று இனக்குழு காலத்தில் வழங்கிவந்த மரபு, பிற்காலத்தில் அரசன், மன்னன், வேந்தன் என்ற சொல்லாட்சியில் மாற்றம் பெற்றது. பெரும் நிலப்பகுதியும், பிறருக்கு உதவக்கூடிய படை அமைப்பும், வேளாண்மையும் கொண்டவர்களை இச்சொற்களில் அழைத்துள்ளனர். மூவேந்தர்கள் என்ற அடையாளம் தொல்காப்பியத்திற்குப் பிந்தைய காலத்தில்தான் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தொல்காப்பியம் குறிக்கும் வேந்து, வேந்தன் என்ற சொல்லாட்சி இனக்குழு வேந்தர்களைச் சுட்டுவதாகத் தெரிகிறது. "வேந்துவினை இயற்கை"[9] "வேந்துவிடு முனைஞர்"[10] "வேந்துறு தொழில்"[11] "வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்"[12] ஆகிய நூற்பா செய்திகள் அக்கருத்தினை உணர்த்துகின்றன.

இனக்குழு மக்கள் வேந்தனுக்கு ஆற்றும் வினை, தொழில் இயற்கையானது. வேந்துறு தொழில், வேந்துவிடு தொழில் ஆகிய தன்மையில் இருந்துள்ளன. இவற்றில் உறு, விடு ஆகிய சொற்கள் நடத்தல், அனுப்புதல் ஆகிய தன்மையில் பொருள்தருகின்றன. உறு என்பது வேந்துனும் சேர்ந்து போர்புரியும் தொழிலை நடத்துதலாகவும், விடு என்பது வேந்தன் தான் அல்லாது வீரர்களை அனுப்புதல் என்பதன்பாற் பொருளுணரலாம். வேந்துறு தொழில் என்பதற்கு நச்சினார்க்கினியர், "இருபெரு வேந்தனும் பிரிவும் அவருள் ஒருவருக்காக மற்றொரு வேந்தனுறு பிரிவும் வேந்தனுக்கு மண்டில மாக்களுள் தண்டத் தலைவர் முதலியோர் உறும் பிரிவும் என்றும், தொழில் என்றது அதிகாரத்தால் பிரிந்து மீளும் எல்லையை"[13] எனக் குறிப்பிடுகிறார். இக்கருத்து போர் வீரர்களாகிய தலைவன், தன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் என்பது வேந்தன் விடுத்த அதிகாரத்தின் தொழிற்படுதலின் கட்டாயமாகும். வேந்தன், அரசன், மன்னன் ஆகிய சொற்கள் அதிகாரத்தினைக் கைக்கொண்டவர்களைக் குறிப்பிடுகிறது. அவ்வதிகாரத்தின்கீழ் போர் வீரனாகவும், பாசறை உதவியாளனாகவும், விழுத்தொழிலினனாகவும் சங்க அகப்பாடல்களில் பாடுபொருள் மாந்தர்களான தலைவன் இருந்துள்ளான் என்பது திண்ணம்.

வேந்தனது சினம்

சங்க காலத்தில் மக்களை வழிநடத்திச் செல்லும் கருவியாகவும் அவர்களிடையே ஏற்படும் குற்றங்களுக்கு அவை, அவையம் அமைத்து நீதி வழங்குபவனாகவும், தண்டனை வழங்குபவனாகவும் மன்னன் இருந்துள்ளான். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற தன்மையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மக்கள் மன்னனது ஆணைக்கேற்பவும் அவர்களது வாழ்வியல் ஆதாரங்கள், பழக்கவழக்கங்கள் போன்றன மன்னனை எதிர்நோக்கியும் முன்னிறுத்தியும் இயங்குகின்றனர். "வேற்று நாட்டு அல்லது பகைப்புலத்து ஒற்றர்கள் பிடிபட்டால் உடனடியாகக் கொல்லப்பட்டுள்ளனர். மன்னனுடைய சொந்த உடைமையாயிருப்பினும் அப்பொருள் களவு போய்விட்டால் அரசின் சொத்து திருடப்பட்டதாகவே கருதப்பட்டது"[14] என ந.சுப்பிரமணியன் கூறுகின்றார். மன்னனும்

*தன்நாட்டு மக்கள் வேற்றுநாட்டு மக்கள் என்ற பாகுபாட்டையும், பகையுணர்வையும் வளர்த்துள்ளான். மன்னனுக்குப் போர்க் காலத்தில் உதவுதல், பணிபுரிதல் அவனது வெற்றிக்கும் ஆட்சிக்கும் துணையிருத்தல் பாடுபொருள் தலைவனின் கடமையாகவும் பணிக்கப்பட்ட வேலையாகவும் இருந்துள்ளது. அதனால் வேந்தனது தேவையென்பதை அது தனக்கான தேவையாகவும், அவனது சினத்திற்கு அஞ்சி பணி செய்துள்ளனர்.*

*“கடுஞ்சின வேந்தன் தொழில் எதிர்ந்தனனே” (ஐங்.448) “பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியான்” (ஐங்.442), “பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியான்” (ஐங்.460), “இருத்த வேந்தன் அருந்தொழில் முறித்தான்” (அகம்.304), எனவரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இதில் வேந்தனின் சினமும், அவன் விடுத்த தொழிலும் முதன்மையாகக் குறிப்பிடப்படுகிறது. வேந்தன் 1பகையரசனிடம் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக நிகழ்த்தும் போர் அவனது சினத்தின் பாற்பட்டது. வேந்தனின் சினத்தின் மூலம் தன் ஆதிக்கத்தைக் காட்டுகிறான். வீரர்களைப் போர் பணிகளில் ஈடுபடுத்துவதற்குத் தன் அதிகாரத்தைச் சினமாகக் காட்டுகிறான். தலைவியைப் பிரிந்து தொழிற்படும் தலைவன் கார்காலத்தில் வந்தும் தன் தொழில் நிறைவுறாமல், வேந்தன் உடனிருந்து தொடங்குதலை நினைந்து வருந்துகிறான்.*

*“வேந்துறு தொழிலோடு வேறுபுரிந்துஅல்*
*வந்துவினை முடித்தனம் ஆயின்” (அகம்.254)*

*“வேந்தன் தொழில் எதிர்ந்தனனே” (ஐங்.448) என்று வேந்தன் கொடுத்த தொழில் இன்னும் முடியவில்லை என்பதால் ஆற்றாமை கொள்கிறான். தன் மனத்துள் தோன்றிய ஆற்றாமையால் இத்தகைய கருத்துகளைப் புலப்படுத்துகிறான் எனத் தெரிகிறது.*

*யானையின் சினத்தையும் வேந்தனின் சினத்தையும் இயைபுபடுத்துதல்*

*“மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பின்*
*கந்துகால் ஒசிக்கும் யானை*
*வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே” (அகம்.64)*
*“……………. ஓங்குநடைக்*
*காய்ச்சின யானை கங்குல் சூழ*
*பெருஞ்சின வேந்தன் பாசறை யோரே” (அகம்.264)*

*வேந்தனது சினத்தினைக் குறிப்பிடுகையில் யானையின் சினத்தினையும் செயலையும் ஒப்புமைப்படுத்திக் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது. யானை, வலிமை, வீரம் நிறைந்த விலங்கு. அதனை எளிதில் அணுகாமுடியாத, நெருக்கமில்லாதவருக்கு அச்சம் தரும் விலங்காகவும், வேந்தனின் வெற்றிக்கு யானையது செயல்கள் உறுதுணையாகவும் இருந்துள்ளன. வேந்தன் போரின்வழி நிறைந்த பொருளைப் பெற்ற அதிகாரம் கொண்டவனாக விளங்குகிறான். தலைவன் இயல்பிலேயே மன்னனின் சினத்திற்கு ஆட்படுதலை அஞ்சியுள்ளான். ஆகவே, வேந்தனது சினம் யானைக்கு ஒப்பானதாகப் பாடப்படுகிறது.*

*வேனிற்காலத்தில் தலைவியிடம் பிரிவுணர்த்தி விருப்பத்துடன் பாசறை சென்ற தலைவன் கார்காலம் நெருங்குகையில் போர்மீது விருப்பம் இல்லாதவனாக மாறுகிறான். குறிப்பிட்ட பருவம் வந்தவுடன் தலைவியின் நினைவும், அவள் மீதான ஆற்றாக் காதலும் தலைவனது மனத்துள் கிளர்ந்தெழுகிறது. பகையரசரை வெல்வதும் நிலம் பெறுவதும் திறை பெறுவதும் தன் அதிகாரத்தை பரவலாக்குதலும் வேந்தனின் விருப்பமாக உள்ளது. இச்சூழலில் தலைவன் முரண்பட்ட மனத்தனாகிறான்.*

*“வைந்நுதி மழுகிய தடங்கோட்டு யானை*
*வென்வேல் வேந்தன் பகைதணிந்து*
*இன்னும் தன்நாட்டு முன்னுதல் பெறினே” (ஐங்.444)*

*யானையின் தந்தங்கள் மழுங்கின. போரில் வென்று பகையும் தணிந்து விட்டது. இன்னும் தன் நாட்டிற்குச் செல்லாமல் இருந்ததால் தலைவன் வருத்தமுறுகிறான். இங்கு 'இன்னும்' என்னும் சொல்லாட்சி தலைவனது இயலாமையை உணர்த்துகிறது. தன் இல்லிற்குக் குறித்த காலத்தில் சென்றடைய இயலவில்லையே என்ற ஏக்கத்தினையும் ஆற்றாமையும் உணர்த்துகிறது. அதிகாரத்திலிருந்து விடுபட இயலாத மனத்தனாகவும், ஆதிக்கம் காட்டும் வழியில் இயங்குபவனாகவும் தலைவன் இருந்துள்ளான். அவனது ஆற்றாமைக்கு வேந்தனது சினம் முக்கிய காரணமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.*

செல்வம் வெல்லுதல்

போரில் வென்று பகை அரசனிடம் திறை பெறுதல், புகழ் ஈட்டுதல் போன்றவை மன்னன் பெறும் செல்வமாகக் கருதப்படுகிறது. வேந்தன் தனது ஆட்சிக்கும், மக்களை வழிநடத்துவதற்கும் செல்வம் ஈட்டுதல் அவசியமாகிறது. அச் செல்வம் நிரம்பப் பெறுவதற்குப் போர் அடிப்படையாக அமைந்துள்ளதைப் பாடல்வழி உணரமுடிகிறது. போருக்குச் சென்ற தலைவன் மீண்டு வருகையில் அவன் வேற்றுப்புலத்திலிருந்து கொணர்ந்த செல்வம் முக்கியப்படுத்தப்படுகிறது.

“போர்வேட்டு எழுந்த மள்ளர் கையதை
சுடர்வாட் குவிமுகம் சிதைய நூறி
மான்அடி மருங்கில் பெயர்த்த குருதி
வானமீனின் வயின்வயின் இமைப்ப
அமர் ஓர்த்த அட்ட செல்வம்
தமர்விரைந்து உரைப்பப் கேட்கும் ஞான்றே” (அகம்.144)

போரில் வெட்டுப்பட்டு முகங்கள் சிதைந்து குருதி எங்கும் பரவிக்கிடக்க பெற்ற செல்வம். இரவு, பகலாக போர் செய்து பெற்றவற்றைத் தலைவன் செல்வமாகக் கொணர்ந்தான். அதனைச் சுற்றத்தார்கள் அனைவரும் விரும்பிக் கேட்டனர்.

“இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து
ஒருபடை கொண்டு வருபடை பெயர்க்கும்
செல்வம் உடையோர்க்கு நின்றன்று விறல்என
பூக்கோள் ஏய தண்ணுமை விலக்கி” (அகம்.174)

இருபெரும் வேந்தர்கள் போரிட்டு செல்வம் பெறுதலில் படையும் அடங்கும். மாற்று வேந்தனின் படைக் கைப்பற்றுதலும் செல்வமாகக் கருதப்பட்டுள்ளது. அதிகப் படைவளம் பெற்ற வேந்தன் வெற்றியைச் செல்வமாகப் பெறுகிறான். அதற்குத் துணை நின்ற சிறந்த வீரனுக்கு 'பூக்கோள்' என்னும் பட்டம் அளிக்கப்பெறுகிறது. இப் பட்டம் பெறும் வீரன் நிறைந்த செல்வம் பெற்றவனாகக் கருதப்படுகிறான்.

“வேந்தனும் வெம்பகை முரணி ஏந்துஇலை
விடுகதிர் நெடுவேல் இமைக்கும் பாசறை
அடுபுகழ் மேவலோடு கண்படை இலனே” (அகம்.214)

வேந்தன் பகைவரை வென்று புகழ் பெறுதலைக் குறிக்கோளாகக் கொள்கிறான். புகழ் பெறுதல் என்பது செல்வம் பெறுதலுக்கு ஒப்பாகும். வேல் உள்ளிட்ட ஆயுதங்கள் நிறைந்த பாசறையில் தூக்கமின்றி தங்குகிறான். போரில் பகை வென்று புகழ் பெறுதல் என்பது அரசனையும், படை தலைவனையும், அவனது வீரர்களையும், நாட்டையும் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

திறை பெறுதல்

அரசன் பெறும் திறைகளில் களிறு பெறுதல் முதன்மையானது. உயர்வானதும் கூட. படைகளில் யானைப் படை பெரிதாக மதிக்கப்பட்டுள்ளது. இதனால் களிற்றினைத் திறையாகப் பெற்றுள்ளனர். களிற்றினைப் பெற்றவர்கள் வணக்கத்திற்குரியவராக இருந்துள்ளனர். மதிப்புடன் வழியனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

“நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி
வந்துதிறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து
சென்றீக என்ப ஆயின் வேந்தனும்” (அகம்.124)

வேந்தன் தன் வல்லாண்மையை நிலைநாட்டுவதற்காகப் போர் நிகழ்த்துகிறான். பகை அரசன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு திறை கொடுக்க முன்வந்தும் போரை விரும்புகிறான். அத்தருணங்களில் தலைவன் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறான்.

“அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் சினம்சிறந்து
வினைவயின் பெயர்க்கும் தானை
புனைதார் வேந்தன் பாசறை யேமே” (அகம்.84)

அதிகாரவயத்தால் கடமை செய்ய ஆட்பட்ட தலைவனின் கடமை முடிதல் என்பது அதிகாரத்தில் உள்ளோரின் விருப்பு வெறுப்பின் வழியே நிகழ்கிறது. இச் சந்தர்ப்பங்களில் தலைவனின் ஆற்றாமை மிகுகிறது. போர் வினைமுடிந்தது. வேந்தனும் பகைவரும் திறை கொடுத்து உறவினர்

*ஆயினர். பகைவர்களாக இருந்த படையினர் முரண் கலைந்து நண்பர்களாயினர். இருவரும் ஒருவர் என பறையும் அறிவித்தது. ஆனால் வேந்தன் தொழில் முடிக்கவில்லை எனத் தலைவன் ஆற்றாமை கொள்கிறான் என்பதை உணர்த்தும் பாடல் வருமாறு:*

*"வந்துவினை முடிந்தனை வேந்தனும் பகைவரும்*
*தம்திறை கொடுத்துத் தமர்ஆ யினரே*
*முரண் செறிந்திருந்த தானை இரண்டும்*
*ஒன்றுஎன அறைந்தன பணையே" (அகம்.44)*

*தலைவனின் ஆற்றாமை நோய்*

*வேந்துவிடு தொழிலில் சென்றுள்ள தலைவன் கார்காலம் நெருங்குகையில் பாசறையில் தலைவியை நினைத்து, தன் இருப்புக் கொள்ளாமல் தொழில் மேற்கொண்டுள்ளான். தலைவன் பிரிவால் தலைவி தன் நலமிழந்து, உடல் மெலிந்து நோயிற்றதைப் போல தலைவனும் பாசறையில் தலைவியை நினைத்து நோயுற்றான்.*

*"கார்நாள் உருமொடு கையறப் பிரிந்தென*
*நோய்நன்கு செய்தென எமக்கே*
*யாமுறும் துயரமவள் அறியாளோ நன்றே" (ஐங்.441)*
*"அறிவர் அல்லர்நம் அருளா தோரென*
*நம்நோய் தன்வயின் அறியாள்*
*எம்நொந்து புலக்கும் கொல்மா அயோளே" (அகம்.304)*

*என்று தாமும் அவளைக் காணாமல் நோயுற்று துன்பம் பெற்றதை தலைவி அறிய வேண்டுமென விரும்புகிறான். அவளைக் கண்டால்தான் தன் நோய் தீரும் என்று எண்ணுகிறான்.*

*"வெய்ய உயிர்க்கும் நோய்தணிய*
*செய்யோள் இளமுலைப் படீஇயலென் கண்ணே" (ஐங்.450)*

*எனவரும் பாடலடிகள் தலைவனின் கண் தலைவியின் உருவத்தைக் காண விரும்புவதை உணர்த்துகிறது. தலைவன் ஆற்றாமையால் வெளிப்படுத்தும் கருத்தாகிறது. வேந்தன் என்னும் அதிகாரத்தில் சிக்குண்டு அவற்றிலிருந்து மீளமுடியாமல் வினைமுடியும் வரைக் காத்திருக்கிறான். கார்காலத்தில் முல்லை பூத்தல் (ஐங்.448) வயமாப் புணர்தல் (குதிரை புணர்தல்) (ஐங்.449) சேவல் இன்புறுதல் (ஐங்.425) போன்ற காட்சிகள் தலைவனுக்கு தலைவியை நினைவூட்டி அவனது நோயை அதிகரிக்கின்றன. அத்தருணங்களில் தலைவியின் பண்பினையும், அழகுநலன்களையும் அருந்ததி அனையக் கற்பினள்; (ஐங்.442) புதல்வன் தாயே (ஐங்.442) என்று கூறுவதோடு, காதலி புலம்பத் துறந்து வந்தனையோ (ஐங்.445) எனத் தலைவி பிரிவு வேண்டாமெனக் கூறியதை நினைத்துக் கொள்கிறான். "ஒண்ணுதற் காண்குவம் வேந்துவினை விடினே" (ஐங்.443), "மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே" (ஐங்.449) என்று, அவளைக் காணும் எண்ணம் எழுகையில் வேந்தன் வயப்பட்ட தன் கடமையான விழுத்தொழில் தடையாக உள்ளதை உணர்கிறான். சினத்தினைத் தலைமையாகக் கொண்ட வேந்தன் அருந்தொழிலை விடுத்தான் என்றால் தலைவி விருந்து பெறுதலுக்கு உரியவள் ஆகிறாள் எனக் குறிப்பிடும் பாடலடிகள் வருமாறு:*

*"பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியான்*
*விருந்துநனி பெறுதலும் உரியள்......" (அகம்.84)*

*தலைவனது நோய் வேந்தன் நாடு பிடித்தல், திறை பெறுதல் போன்ற தொழில்களால், கார்காலத்தில் வந்தும் நிலைகுலைந்த மனத்தனாகப் பணியாற்றியுள்ளான் என ஊகிக்கமுடிகிறது.*

*வேந்தனுக்காகத் தலைவியைத் தேற்றுதல்*

*வினையே ஆடவர்க்கு உயிர் என்று கருதிய தலைவன் தன் தொழிலான வேந்தர்க்கு உற்றுழி உதவச்செல்கையில் கார்காலத்தில் மீண்டு வருவோம் என்று கூறுகிறான். இதனால் பிரிவு மறுத்தத் தலைவியைத் தேற்றுகிறான்.*

*"செல்வேம் தில்ல யாமே செற்றார்*
*வெல்கொடி அரணம் முருக்கிய*
*கல்லா யானை வேந்துபகை வெலற்கே" (ஐங்.429)*

*எனத் தன் தொழிலைக் கூறிவதோடு, வேந்தன் பகைவெல்லுதலைக் கடமையாகக் கூறுகிறான். இங்கு, கல்லா யானை என்பதில் யானையின் கடமை கூறப்படுகிறது. பகைவனின் மதிலை*

*உடைத்தலைத் தவிர வேறுதொழில் எதுவும் தெரியாத யானை எனப் பொருள்படுகிறது. யானை தலைவனுக்கு உவமையாகிறது. யானையைப் போல தலைவனும் வேந்தனின் கடமைப்பட்டவன். அவனுக்கும் போர்ப்புரிதலைத் தவிர வேறுதொழில் தெரியாதவன். யானை மதில்களை அழித்து பகைவனை வெல்வதற்குத் துணையாவதைப் போல தலைவன் செற்றாரை (பகைவரை) வெல்வதற்கு வேந்தனுடன் நெருங்கி இருந்து கடடையாற்றும் போர்வீரனாக உள்ளான். தலைவன் பிரிகையில் தலைவி பசப்புறுகிறாள். இதனால் தலைவன் தன் செலவினை ஒத்தி வைத்துள்ளான் அல்லது தவிர்த்துள்ளான். "பசப்பு நீவிடில் செல்வேம் தில்ல யாமே" (ஐங்.429) எனக் கூறித் தேற்றுகிறான். 'பசப்பு' என்பது தலைவியுறும் வருத்தமாகும். அவ் வருத்தத்தினைத் தலைவன் தேற்றுதலுக்குப் பொருளீட்டுதல் காரணமன்றி வேந்தன் விடுத்த தொழில் தவிர்க்கமுடியாத கடமையாகிறது.*

*முடிபாக*

*தலைவன் சென்றுள்ள தொழில்களில் விழுத்தொழில் முதன்மையானது. தூது, பகை ஆகிய போர்த்தொழில்கள் அதன்பாற்பட்டது. வேந்தன் பகைவேந்தனிடம் போர் அறிவித்தல், திறை பெறுதல், பாசறைக் கலம் குறித்தல் போன்றவை விழுத்தொழிலால் நிகழ்வன. 'அரசு விடுத்து' என்பது பகையரசரைக் குறிக்கும். பகை வேந்தன் அனுப்பிய யானை திறையாகிறது. ஒரு குழு சார்ந்த வேந்தன் வேறு குழு சார்ந்த வேந்தனைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு விழுத்தொழில் முதன்மை பெறுகிறது. பகை அரசன் கொடுக்கும் திறை, பிற பொருள்களைப் பெறவும், அதற்கான தேவையை உருவாக்கவும், அது குறித்த ஒற்று ஆராய்ந்த செய்திகளைப் பெறவுமான செயல்பாடுகளுக்கு விழுத்தொழில் அமைந்துள்ளது என முல்லைப் பாடல்கள்வழி புலனாகிறது. பாசறையில் தலைவன் ஆற்றாமை உறுதலுக்கு வேந்தனின் அதிகாரமும் அவன் விடுத்தத் தொழிலும், அதை நிறைவேற்ற அவன் வெளிப்படுத்திய சினம் என்னும் ஆதிக்கம் காரணமாகிறது.*

*அடிக்குறிப்புகள்*

1. *நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கலித்தொகை, பா.27, கழக வெளியீடு, சென்னை.*
2. *மேலது, பா.129.*
3. *ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூற்.1336, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*
4. *பெ.மாதையன், சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பக்.64-65, பாவை பப்ளிக்கேஷன்ஸ், சென்னை.*
5. *க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம், செய்யுளியல் (உரைவளம்), ப.51, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
6. *ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), பதிற்றுப்பத்து, ப.51, சாரதா பதிப்பகம், சென்னை.*
7. *ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல்காப்பியம், மரபியல், நூற்.1571, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*
8. *மேலது, நூற்.1582.*
9. *மேலது, புறத்திணையியல், நூற்.978.*
10. *மேலது, நூற்.1003.*
11. *மேலது. நூற்.1135.*
12. *மேலது, மரபியல் நூற்.1582.*
13. *நச்சினார்க்கினியர் (உ.ஆ), தொல்காப்பியம், கற்பியல், ப.62.*
14. *ந.சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல், ப.251.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********